# மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்
# தமிழ் மாதிரி தேர்வு
# ஏழாம் வகுப்பு

1. **“தமிழிசைக் காவலர்” என புகழப்படுபவர்?**
   a) திரிகூடஇராசப்பக் கவிராயர் b) முனைப்பாடியார்
   c) இரசிகமணி d) குன்றக்குடி அடிகளார்

2. **சரியானது எது?.**
   i. “பழமொழி நானூறு” பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
   ii. இந்நூலின் ஆசிரியர் மூன்றுரை அரையனார்.
   iii. இந்நூல் 400 பாடல்களைக் கொண்டது
   a) I, II b) II, III c)I, III, d) I, II, III

3. **“தண்பொருநைப் புனல் நாடு” என்று திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியவர்?**
   a) திருஞானசம்பந்தர் b) அப்பர் c) சேக்கிழார் d) சுந்தரர்

4. **எது தவறான இணை?**
   I. குழி- நீட்டல்அளவைப் பெயர்
   II. சாண் - நில அளவைப்பெயர்
   a) I மட்டும் b) II மட்டும் c)இரண்டும் d) இவற்றுள் ஒன்றுமில்லை

5. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதல் திருவந்தாதியை பாடியவர்?
   a) நாதமுனி b) பேயாழ்வார் c) பூதத்தாழ்வார் d) பொய்கையாழ்வார்

6. **“ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
   **ஞானத்தமிழ் புரிந்த நான்”-இப்பாடலில்**
   **“நாரணன்” என்பது யாரை குறிக்கிறது?**
   a) முருகன் b) திருமால் c) இந்திரன் d) வருணன்

7. **“<u>இடர்</u> ஆழி நீங்குகவே” இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் என்ன?**
   a) துன்பம் b) மகிழ்ச்சி c) ஆர்வம் d) இன்பம்

8. முனைப்பாடியார் இயற்றிய “அறநெறிச்சாரம்” எத்தனை பாடல்களைக் கொண்டது?
   a) 235 b) 245 c) 225 d) 252

9. **“செல்வத்துள் பயனே ஈதல்**
   **துய்ப்பேம் எனினே தப்புந பலவே”- இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?**
   a) புறநானூறு b) அகநானூறு c) நற்றிணை d) குறுந்தொகை

10. **“குறட்செல்வம்” என்னும் நூலை எழுதியவர்?**
    a) முனைப்பாடியார் b) வீ.முனிசாமி c) குன்றக்குடி அடிகளார் d) சுப்ரபாரதிமணியன்

11. **மூன்றுரை அரையனார் - சரியானது எது?**
    I. இவர் இனியவை நாற்பது நூலின் ஆசிரியர்
    II. இவர் கி.பி. 4-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
    III. இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர்
    a)I, II b) II, III c)I, III, d) I, II, III

12. **பூதத்தாழ்வார் பிறந்த ஊர் எது?**
    a) திருவெ.்.கா b) மாமல்லபுரம் c) திருநெல்வேலி d) மதுரை

13. சரியானது எது?
   I. புத்துமண் - சுப்ரபாரதிமணியன்
   II. வள்ளுவர் உள்ளம் - வீ. முனிசாமி
   III. தமிழ்விருந்து - இரா.பி.சேது
   a)I, II  b) II, III  c)I, III,  d) I, II, III

14. "யாண்டு" என்னும் சொல்லின் பொருள்.............
   a) எனது  b) எங்கு  c) எவ்வளவு  d) எது

15. எது தவறான இணை?
   a) கழனி - வயல்
   b) வெற்பு - மழை
   c) வாரணம் - யானை
   d) பரி - குதிரை

16. எது சரியானது அல்ல?
   I. முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை – அகநானூறு
   II. கொற்கையில் பெருந்துறை முத்து – நற்றினை
   a) I  b) II  c)I, II  d) இவற்றுள் ஒன்றுமில்லை

17. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர்?
   a) பாரதிதாசன்  b) சுப்ரபாரதிமணியன்  c) இரா.பி.சேது  d) கவிமணி

18. "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்று பாடியவர்
   a) திருக்குறளார்  b) திருவள்ளுவர்  c) பாரதியார்  d) பாரதிதாசன்

19. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை ..........
   a) 40  b) 42  c) 44  d) 46

20. காளமேகப்புலவர் - சரியானது எது?
   I. இவரின் இயற்பெயர் வரதன்
   II. சரசுவதி மாலை என்னும் நூலை எழுதியவர்
   a)I  b)II  c)I, II  d) இவற்றுள் ஒன்றுமில்லை.

21. "மலைக்கள்ளன்" - என்னும் நூலை எழுதியவர்?
   a) கவிமணி  b) பாரதிதாசன்  c) வெ.இராமலிங்கனார் d) சுரதா

22. "கொல்லிப்பாவை" என்னும் சிற்றிதழை நடத்தியவர்?
   a) இரா.பி.சேது  b) ராஜமார்த்தாண்டன்  c) சுப்ரபாரதிமணியன்  d) முனைப்பாடியார்

23. மகரக்குறுக்கம் இடம்பெறாத சொல் ............
   a) போன்ம்  b) மருண்ம்  c) பழம் விழுந்தது  d) பணம் கிடைத்தது

24. .............செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்?
   a) மன்னன்  b) பெறாமை இல்லாதவன்  c) பெறாமை உள்ளவன்  d) செல்வந்தன்

25. திருக்குறளில் அறத்துப்பால் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?
   a) 70  b) 38  **c**) 25  d) 123

26. எந்த ஆண்டு, முத்துராமலிங்கத்தேவர் கமுதியில் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார்?
   a) 1937  b) 1939  c)1934  d) 1936

27. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர்
   a) இராஜாஜி  b) நேதாஜி  c) காந்திஜி  d)நேருஜி

28. இரா.பி.சேது எந்த நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?

a) தமிழகம் - ஊரும் பேரும்
b) தமிழ் விருந்து
c) கடற்கரையினிலே
d) தமிழின்பம்

29. சரியானது எது?

I. சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன்
II. இவர் உவமைக் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார்
III. பாரதியார் மீது கொண்ட பற்றினால் தம் பெயரைச் ''சுப்புரத்தின தாசன்'' என மாற்றிக்கொண்டார்

a)I, II b) II, III c)I, III, d) I, II, III

30. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது.

a) ஐகாரக்குறுக்கம் b) ஔகாரக் குறுக்கம் c) மகரக்குறுக்கம் d) ஆய்தக்குறுக்கம்

31. பொருத்துக

a) பந்தர் - முதற்போலி
b) மைஞ்சு - முற்றுப்போலி
c) அஞ்சு - இடைப்போலி
d) அரையர் - கடைப்போலி

a) a-4, b – 1, c-2, d-3
b) a-4, b-1, c-3, d- 2
c) a-1, b – 4, c-2, d-3
d) a-1, b-2, c-4, d-3

32. பெயர்ப்பகுபதம் ……..வகைப்படும்?

a) 4 b) 5 c) 6 d) 7

33. சரியானது எது?

I. எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை வழக்கு எனப்படும்
II. வழக்கு மூன்று வகைப்படும்

a) I b) II c) I, II d) இவற்றுள் ஒன்றுமில்லை

34. எது தவறான இணை?

a) தண்ணீர் யுத்தம் - சுப்ரபாரதிமணியன்
b) மண்வாசல் - தேனரசன்
c) சித்திரமடல் - வரதன்
d) வெள்ளை ரோஜா – வீ.முனிசாமி

35. 'குயில்'' என்ற இதழில் கவிதைகள் எழுதியவர்?

a) சுப்ரபாரதிமணியன் b) இரா.பி.சேது c) ராஜமார்த்தாண்டன் d) தேனரசன்

36. "கோட்டோவியம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது……..

a) கோடு +ஓவியம் b) கோட்டு+ஓவியம் c) கோட்+டோவியம் d) கோடி+ஓவியம்

37. மதுரையில் உலகத்தமிழ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

a) 1969 b) 1983 c) 1981 d) 1980

38. பின்வருவனவற்றுள் முதனிலை திரிந்த தொழிற்பெயர்…………

a) ஊறு b) நடு c) விழு d) எழுதல்

39. சரியானது எது?

I. ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்
II. ஔகாரம் சொல்லின் இடையிலும், இறுதியிலும் மட்டுமே வரும்

a) I b) II c) I,II d) இவற்றுள் ஒன்றுமில்லை

40. "இலைஞ்சி" என்பது
a) முதற்போலி b) இடைப்போலி c) கடைப்போலி d) முற்றுப்போலி

41. "புனையா ஓவியம் கடுப்பப் புனையில்" என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
a) நற்றிணை b) நெடுநல்வாடை c) மணிமேகலை d) சிலப்பதிகாரம்

42. எது தவறான இணை?
a) வங்கூழ் - காற்று
b) எல் - பகல்
c) வங்கம் - கடல்
d) மாடஒள்ளெரி – கலங்கரை விளக்கம்

43. "நெடுந்தொகை" என்று அழைக்கப்படும் நூல் எது?
a) குறுந்தொகை b) அகநானூறு c) புறநானூறு d) ஐங்குநுறூறு

44. மருதன் இளநாகனார், கலித்தொகையின் மருதத்திணையில் பாடிய பாடல்களின் எண்ணிக்கை
a) 33 b)25 c) 35 d) 53

45. எதுகை இடம்பெறாத இணை…………..
a) இரவு - இயற்கை b) வங்கம் - சங்கம்
c) உலகு – புலவு d) அசைவு - இசைவு

46. "உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை" - இப்பாடல்வரியில் "அழுவம்" என்பதன் பொருள் என்ன?
a) கப்பல் b) ஏணி c) கடல் d) கலங்கரை விளக்கு

47. "பட்டினப்பாலை" என்ற நூலை இயற்றியவர்?
a) தொண்டைமான் இளந்திரையன் b) உருத்திரங் கண்ணனார்
c) மருதன் இளநாகனார் d) முடத்தாமக் கண்ணியார்

48. அறிவியல் புனைகதைகளின் தலைமகன் என்று புகழப்படும் "ஜீல்ஸ் வெர்ன்" எந்த நாட்டை சேர்ந்தவர்?
a) இத்தாலி b) பிரான்சு c) ஜெர்மனி d) இங்கிலாந்து

49. பொருத்துக
a) இயற்சொல் - பெற்றம்
b) திரிசொல் - இரத்தம்
c) திசைச்சொல் - அழுவம்
d) வடசொல் - சோறு

a) a-4, b - 3, c-1, d-2 b) a-2, b-3, c-1, d-4
c) a-4, b-3, c-2, d-1 d) a-2, b-3, c-4, d-1

50. வேயாமாடம் எனப்படுவது
a) வைக்கோலால் வேயப்படுவது
b) சாந்தினால் பூசப்படுவது
c) ஓலையால் வேயப்படுவது
d) துணியால் மூடப்படுவது

51. தொல்காப்பியம் கடற்பயணத்தை…………..வழக்கம் என்று கூறுகிறது.
a) நன்னீர் b)தண்ணீர் c)முந்நீர் d) கண்ணீர்

52. "கலம் தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரை சேர்க்குந்து"
a) அகநானூறு b) நற்றினை c) குறுந்தொகை d) புறநானூறு

53. சரியானது எது?

I. கப்பல் செலுத்துபவர் - மீகாமன்

II. கப்பல் கட்டும் கலைஞர் - கம்மியர்

a) I b) II c) I, II d) இவற்றுள் ஒன்றுமில்லை

54. இலக்கண முறைப்படி சொற்கள் எத்தனை வகைப்படும்.

a) 3 b) 4 c) 5 d) 6

55. “வேளாண்வேதம்” என்றழைக்கப்படும் நூல் எது?

a) நான்மணிக்கடிகை b) நாலடியார்

c) இனியவை நாற்பது d) கார் நாற்பது

56. “தூண்” என்னும் பொருள் தரும் சொல்…….

a) நெகிழி b) சென்னி c) ஏணி d) மதலை

57. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி………….

a) சுக்கான் b) நங்கூரம் c) கண்ணடை d) சமுக்கு

58. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது…………

a) இயற்சொல் b)திரிசொல் c) திசைச்சொல் d) வடசொல்

59. கேணி என்பது

a) இயற்சொல் b)திரிசொல் c) திசைச்சொல் d) வடசொல்

60. “கண்ணகி புரட்சிக் காப்பியம்” என்னும் நூலை எழுதியவர்?

a) சுரதா b) பாரதிதாசன் c) சுப்ரபாரதிமணியன் d) பாரதியார்

61. “எச்சம் எனவொருவன் மக்கட்டுச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற” - இப்பாடல்வரியில் “விச்சை” என்பதன் பொருள்?

a) செல்லம் b) கல்வி c) அணிகலன் d) வீடு

62.நாலடியார் - சரியானது எது?

I. இந்நூல் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும்.

II. இந்நூல் பதினென்மேல்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

III.இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுகிறது.

a) I, II b) II, III c) I, III d) I, II, III

63. “கனவு” என்னும் இலக்கிய இதழை நடத்தியவர்?

a) தேனரசன் b) சுப்ரபாரதிமணியன் c) இராசகோபாலன் d) இரா.பி.சேது

64.சரியான இணை எது?

I. கூ - பூமி

II. ஏ – அம்பு

III.சே – மதில்

IV.பே – மேகம்

a) I, II, IV b) II, IV c) I, III, IV d) I, II, III, IV

65.”ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினார்” என்ற செய்தி இடம்பெற்றுள்ள நூல் எது?

a) பரிபாடல் b) நெடுநல்வாடை c) மணிமேகலை d) நற்றிணை

66. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்ட பயன்பட்ட பொருள்களில் ஒன்று……….

a) மண்துகள் b) நீலவண்ணம் c) எண்ணெய் வண்ணம் d) கரிக்கோல்

67. முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்ட "ஆதிச்ச நல்லூர்" எந்த மாவட்டத்தில் உள்ளது?
a) சிவகங்கை b) திருநெல்வேலி c) காஞ்சிபுரம் d) சென்னை

68. பாரதிதாசன் எதற்காக சாகப்த்திய அகாடமி விருது பெற்றார்?
a) இசையமுது நூல் b) பாண்டியன் பரிசு நூல்
c) பிசிராந்தையார் நாடகம் d) கண்ணகி புரட்சிக் காப்பியம்

69. "வைப்புழிக் கோட்படா வாய்த்தீமிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்......"
இப்பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
a) நாலடியார் b) புறநானூறு c)கார் நாற்பது d) ஐந்திணை ஐம்பது

70. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்?
a) 4 b)5 c) 3 d)6

71. "நோ" என்ற ஒரெழுத்து ஒரு மொழியின் பொருள் என்ன?
a) நெருப்பு b) வறுமை c) சோலை d)பூமி

72. "பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு அறியாப் பழங்குடி"- இப்பாடலை பாடியவர்?
a) திருஞானசம்பந்தர் b) சந்தரர்
c) திரிகூட இராசப்பக் கவிராயர் d)இளங்கோவடிகள்

73. திருநெல்வேலி.........மன்னர்களோடு தொடர்பு உடையது
a) சேர b) சோழ c) பாண்டிய d)பல்லவ

74. அக்குசாலை என்பது
a) துறைமுகம் b) சிறைச்சாலை
c) பொன்நாணயங்கள் உருவாக்கும் இடம் d) மலைப்பகுதி

75. "கடித இலக்கியத்தின் முன்னோடி" என்று புகழப்படுபவர்?
a) டி.கே.சிதம்பரநாதர் b) தேனரசன் c) இரா.பி.சேது d) ராஜமார்த்தாண்டன்

76. காவடிச்சிந்தைப் பாடியவர்?
a) அழகிய சொக்கநாதர் b) அண்ணாமலையர்
c) அருணகிரிநாதர் d) திரிகூட ராசப்பக் கவிராயர்

77. அடுக்குத்தொடரில் ஒரே சொல்.........முறை வரை அடுக்கி வரும்.
a) 2 b) 3 c) 4 d) 5

78. "இனிப்பு தின்றான்" என்பது?
a) தொழிலாகுபெயர் b) பண்பாகுபெயர்
c) சினையாகு பெயர் d) காலவாகுபெயர்

79. "பிரயாணம்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?
a) சே.பிருந்தா b) பாவண்ணன் c) கண்ணதாசன் d) தேனரசன்

80. சரியானது எது?
I. அடுக்குத்தொடரில் சொற்கள் இணைந்தே நிற்கும்.
II. இரட்டைக் கிளவியின் சொற்கள் தனித்தனியே நிற்கும்
a) I b) II c) I, II d) இவற்றுள் ஒன்றுமில்லை

81. **கீழ்க்கண்டவற்றுள் யார் தமது வீட்டில் "வட்டத்தொட்டி" என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தியவர்?**
a) தவத்திரு குன்றக்குடி அடிகளார்  b) முத்தையா
c) திரிகூடராசப்பக் கவிராயர்  d) இரசிகமணி

82. **பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது..........**
a) பொருளாகுபெயர்  b) சினையாகுபெயர்
c) பண்பாகுபெயர்  d) இடவாகுபெயர்

83. **எது சரியானது அல்ல?**
I. ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது எடுத்துக்காட்டு உவமை அணி ஆகும்.
II. "பொன்மழை பொழிந்தது போல்" - என்ற தொடர் எடுத்துக்காட்டு உவமை அணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
a) I  b) II  c) I, II  d) இவற்றுள் ஒன்றுமில்லை

84. **"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்" - இப்பாடலை பாடியவர்?**
a) பொய்கையாழ்வார்  b) பூதத்தாழ்வார்
c) பேயாழ்வார்  d) இவற்றுள் யாருமில்லை

85. நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர்?
**வெய்ய கதிரோன் விளக்காகச்" - இப்பாடலை பாடியவர்?**
a) நல்லந்துவனார்  b) உருத்திரசன்மா
c) நாதமுனி  d) நம்பியாண்டார் நம்பி

86. **முனைப்பாடியார், எந்த நூற்றாண்டை சேர்ந்தவர்?**
a) கி.பி.13  b) கி.பி.12  c) கி.பி.11  d) கி.பி.10

87. **'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல்**
a) முதுமை  b) புதுமை  c) தனிமை  d) இனிமை

88. **'உலகம் உண்ண உண்: உடுத்த உடுப்பாய்" என்று கூறியவர்.........**
a) பாரதியார்  b) பாரதிதாசன்  c) முடியரசன்  d) கண்ணதாசன்

89. **ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும்
ஒருவருக்காகவும் என்பது...........நெறி.**
a) தனியுடைமை  b) பொதுவுடைமை  c) பொருளுடைமை  d) ஒழுக்கமுடைமை

90. **'அரசு' என்பது**
a) நெடில்தொடர்க் குற்றியலுகரம்
b) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
c) வன்தொடர்க் குற்றியலுகரம்
d) மென்தொடர்க் குற்றியலுகரம்

91. **கீழ்கண்டவற்றுள் எது காட்டைக் குறிக்கும் வேறு பெயர் அல்ல?**
a) அரண்  b) அடவி  c) முளரி  d) கமுகு

92. **கீழ்கண்டவற்றுள் எவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்கள் இல்லை?**
a) கு,டு,பு  b) சு,டு,று  c) து,பு,கு  d) சு,பு,கு

93. எது தவறாண இணை?

a) துறைமுகம் - இராசகோபாலன்
b) என் கதை – வெ.இராமலிங்கனார்
c) இயேசுகாவியம் - முத்தையா
d) பாய்மரக் கப்பல் - சே.பிருந்தா

94. தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று............

a) உருது b) இந்தி c) தெலுங்கு d) ஆங்கிலம்

95. "தன்னாடு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.............

a) தன்+னாடு b) தன்மை+னாடு c) தன்+நாடு d) தன்மை+நாடு

96. "காயிதே மில்லத்" என்னும் அரபுச் சொல்லுக்குச் ............என்பது பொருள்

a) சுற்றுலா வழிகாட்டி
b) சமுதாய வழிகாட்டி
c) சிந்தனையாளர்
d) சட்டவல்லுநர்

97. சரியானது எது?

I. குற்றியலிகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ஆறு வகைப்படும்
II. குற்றியலிகம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களிலல் மட்டுமே உள்ளது.

a) I -சரி, II-தவறு b) I -தவறு, II-சரி c) இரண்டும் சரி d) இரண்டும் தவறு

98. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"- இக்குறளில் இடம் பெற்றிருப்பது?

a) உருவக அணி
b) ஏகதேச உருவக அணி
c) இல்பொருள் உவமையணி
d) எடுத்துக்காட்டு உவமை அணி

99. எது சரியானது அல்ல?

I. நாட்டுப்புறப்பாடலை "வாய்மொழி இலக்கியம்" என்றும் வழங்குவர்.
II. பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப்பாடல்களை "மலைஅருவி" என்னும் நூலில் சக்திவேல் தொகுத்துள்ளார்.

a) I b) II c) I, II d) இவற்றுள் ஒன்றுமில்லை

100. "ஆழ்கடலின் அடியில்" என்னும் புதினத்தை எழுதியவர்?

a) வாக்கர்
b) ஜுல்ஸ்வெர்ன்
c) வெண்ணிக்குயத்தியர்
d) மார்க்கோபோலோ

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்
தமிழ் மாதிரி தேர்வு
ஏழாம் வகுப்பு

## ANSWER KEY

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | D | C | C | D | B | A | C | A | C |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| B | B | D | B | B | C | C | C | B | C |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| C | B | D | C | B | C | B | D | A | B |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| A | C | C | D | D | A | C | A | D | B |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| B | C | B | C | A | C | B | B | A | B |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| C | D | C | B | B | D | A | B | C | B |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| B | C | B | A | A | A | B | C | A | D |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| B | D | C | C | A | B | C | B | B | D |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| D | B | C | A | C | A | A | B | B | B |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| D | B | D | C | C | B | B | B | B | B |